M. SATKUNAM B.A. (HONS)

உ

சிவமயம்



# மண்டூர் முருகன்

# பக்திரசப் பாமாலை.

—( ❀ )—

ஆக்கியோன்:

அன்பன், கோ. நாராயணபிள்ளை வைத்தியர்

மண்டூர்.

5—10—64.

சிவமயம்

# ஆக்கியோன் முன்னுரை.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயமாம்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே."

—இது திருமூல யோகியின் புனிதவாக்கு.

நமது உள்ளங்களெல்லாம் ஆலயம் என்பதே திருவருள் நிலை கைவரப்பெற்ற பெரியோர்கள் கண்ட உண்மை. இதற்கு எடுத்துக்காட்டாகச் சிறந்த கவிக்கனிகளைத் தந்துவிட்டுச் சென்றுள்ளார்கள் நம் பெரியோர்கள். நமது சமய நெறிகளில் பக்திநெறி தொன்மையானது. இத்தகைய தலையாய நெறி நின்று இறைவன் புகழ்பாடி, இறையருளும் இசை ஞானமும் கைவரப்பெற்ற ஞானிகள் மரபில் வந்த நமக்கு இசை ஞானமும் அருள் ஞானமும் கிட்டுதல் வியப்பல்ல. "அரைநிமிஷ நேரமட்டில் தவமுறை தியானம் வைக்க அறியாத" என்று பாடுகிறார் முருகனருள் கைவரப்பெற்ற அருணகிரிநாத சுவாமிகள். இத்தகைய அரை நிமிஷத் தியானத்தின் பயன்தான் இந்த மண்டூர் முருகன் பக்திரசப் பாமாலை. இம்மாலையைத் திருமுருகன் முன்னிலையில் அன்புடன் பாடிவருவோர் குன்றாத வாழ்வும், குறையாத செல்வமும் பெற்று வாழ்வார் என்பது திண்ணம். முருகா என்று ஒருதரம் நாம் சொன்னால், இருதரம் வந்து நம் குறைகளைக் களையச் சித்தமாக உள்ளான் முருகன். சிறியேனின் சிறுபிரயத்தில் சீர்தூக்காது செய்யும் இச்சிறு நூலைச் சிறப்புறப் போற்றிப் பாதுகாத்துப் பாடி இன்புறுதல் உங்கள் அனைவரதும் கடமையாகும். இம்மாலையைப் பாடுவதால் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களைத் தீர்த்து ஆதரித்து அருள் தருவான் முருகன் என்பது எனது குன்றாத நம்பிக்கை. இந்நூலை அன்புடன் பார்வையிட்டுப் பிழை களைந்து ஊக்கமூட்டி அன்புமுகங்கொண்டு ஆதரித்த எனது ஆருயிர் நண்பர்களுக்கு எனது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

இங்ஙனம்,

கோ. நாராயணபிள்ளை.

மண்டூர்,
22-9-1964.

# மண்டூர் முருகன் பக்திரசப் பாமாலை.

ஆக்கியோன்: அன்பன் கோ. நாராயணபிள்ளை வைத்தியர்.

## விநாயகர் காப்பு

திருவளரும் தில்லைமண்டூர் முருகன்மேலே
பக்திரசப் பாமாலை பாடவேண்டும்
அருகினிலே வந்தமர்ந்து அருளைத்தாரும்
ஆனைமுகங் கொண்டவனே! பணிந்தேனுன்னை
பருவமழை யெனநாவில் பாடல்வெள்ளம்
பரிவுடனே ஆறாக ஓடவேண்டும்
கருவாக உள்ளத்தில் நின்றிலங்கும்
கணபதியே! என்றும்நீ காப்புத்தானே.

## நூல்

1. அன்பர்கள்தன் நெஞ்சமர்ந்தாய் அரனே! நீதான்
ஆருமற்ற பாவியாகி அலறுகிறேன்
இன்பமெல்லாம் தருபவனே இறைவா! என்னை
ஈடேற வைத்திடுவாய் கதிரைநாதா!
துன்பமெல்லாம் சூழ்ந்துவந்து கலக்குதையா
தோகைமயில் வாகனனே துரையேஎன்னை
சின்னமொன்றும் வாராமல் காத்தாட்கொள்வாய்!
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

2. ஆறுமுகம் பன்னிரண்டு கையும்வேலும்
அலங்கார அணிகள்பல அணிந்தமார்பா!
தேறுமுகங் காட்டாயோ தில்லைநாதா!
தீவினையெலா மகற்றி ஆளவேணும்
வேறுமுகங் காணயான் தயங்குகிறேன்
வெற்றிவடி வேலவா! கார்த்தாழையா!
சிறுமுகங் கொண்டென்னைத் துரத்திடாதே
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

3. இறைவனென என்னாளும் இன்பமாக
இணைபிரியாத் தோழனாய் நின்றதேவா!
குறையொன்றும் வாராமல் வாழவேண்டும்
குன்றனைய குணமுடைய குமரவேலா!
சிறையிருக்கும் கிளிபோலத் தினமும்நானே
தியங்குகிறேன் இவ்வேளை செந்தில்வேலா!
நிறைவான வாழ்வெனக்குத் தந்துஆள்வாய்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

4. ஈடேறும் வழிசொல்லி எந்தநாளும்
இரக்கமுள்ள தெய்வமென நின்றதேவா!
நாடோறும் உன்புகழை நவிலவேண்டும்
நலம்பலவும் கொண்டுநான் வாழவேண்டும்
தேடாததிரவியமே! சிவமே! என்னை
ஆதரித்து ஆண்டிடுவாய் தில்லைவேலா!
வாடுகின்றேன் மனக்கவலை தீர்த்துஆள்வாய்!
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

5. உன்புகழை எந்நாளும் பாடவேண்டும்
உற்றதுணையாக வந்து காக்கவேண்டும்
மின்னனைய மாயையிலே வீழாவண்ணம்
விமலா நீ! காத்திடுவாய் தங்கவேலா!
அன்னையும்நீ! தந்தையுந்நீ! குருவும்நீயே!
ஆருமற்ற பாவியாகி அலைகின்றேன்யான்
பொன்னனைய பொற்பாதந் தந்துஆள்வாய்!
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

6. ஊனமுற்ற உடம்புதன்னை எந்தநாளும்
உருக்குலைக்கும் நோய்கள்வந்து அணுகாவண்ணம்
கானமயிலேறி வரும் கருணைத்தேவா!
கவலைதீர்க்கும் மாமணியே அருளைத்தாராய்!
ஈனமொன்றும் வாராமல் வாழவேண்டும்
ஈஸ்பரனார் தன்மகனே இன்பத்தேவா!
வானவரைச் சிறைவிடுத்த வள்ளிலோலா!
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

7. எங்கள்குல தெய்வமென உதித்தவேலா!
ஈடேறும் வழிதந்து ஆளவேண்டும்
கங்கையணிந்தோன் மகனே! கருணைசெய்வாய்!
கதிர்காமந் தனிலுறையும் கந்தாநாதா!
அங்கமெல்லாம் செங்கமலம் போன்றதேவா!
ஆறுமுகமான வடிவேலா! நீதான்
மங்காத புகழுள்ள முருகா! ஐயா!
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

8. ஏறுமயிலேறி வரும் ஈசாநீதான்!
இணையில்லாப் புகழோடு விளங்குகின்றாய்!
நாறிடுமித் தேகத்தை நம்பிநானும்
நன்னெறியே செல்லாமல் அல்லலுற்றேன்

ஆறுதலைத் தந்திடுவாய்! அரனேநீதான்!
அன்புடனே வந்துஎன்னை ஆளவேண்டும்
வீறுகொண்ட வினைகளெல்லாம் அகற்றிஆள்வாய்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

9. ஐங்கரனுக் கிளையவனே! ஐயாவேலா!
ஆதரித்து ஆண்டிடுவாய்! செந்தூர்வாழ்வே!
இங்குஎன்னை ஆதரிப்பார் ஒருவரில்லை
ஏறுமயில் ஏறிவரும் ஈசா!நீதான்
சிங்கமுகன் தன்னைவென்ற திருக்கைவேலா!
சீர்பெற்று விளங்குகின்ற சிவனேஐயா!
பங்கமொன்றும் வாராமற் காக்கவேண்டும்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

10. ஒருகலையும் நானறியேன் உயர்வுள்ளோனே!
உத்தமனே சித்தமிசை சிறந்துவாழ்வாய்!
கருவுற்ற நாள்முதலாய்க் கவலையாலே
கலங்குகிறேன் கருணைவைத்து ஆள்வாயையா!
திருவருளும் செல்வமெல்லாம் தரவும்வேணும்
சீர்நிறைந்த எங்கள்குல தெய்வமாஞய்
குருவாகவந்து என்னை ஆளவேண்டும்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

11. ஓதாமல் ஒருநாளும் இருக்கமாட்டேன்
உன்புகழை எந்நாளும் மறக்கமாட்டேன்
தீதான பலதுறைகள் வந்திட்டாலும்
சிவமுருகா எனுநாமம் மறக்கமாட்டேன்
வேதாகமங்களெல்லாம் விளங்க நிற்கும்
வெற்றிவடி வேலவனே! அருளைத்தாராய்!
ஆதாரமானவனே அன்பு கொண்டேன்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

12. ஔவும்உவ்வும் சவ்வு மானதேவா!
ஆண்டவனே பழனிமலை அமர்ந்தகோவே
ஒவ்வாத வாழ்வுவந்து அமைந்திடாமல்
உண்மையன்பு தந்துஎன்னை ஆள்வாய்ஐயா!
செவ்வையாய் உன்பாதம் பணிந்தபேர்க்குத்
தீவினைகள் அகற்றிடுவாய் தில்லைவேலா
ஓம்சவ்வும் சரவணபவாயநம என்றுவாழ்ந்தேன்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

13. அக்கரவம் பூண்டோனின் மகனே ஐயா!
ஆர்வமுடன் வந்திடுவாய் ஈசாநாதா!
சக்கரக்கையோன் மருகா! சரணம்ஐயா
சண்முகனே ஓம்முருகா! சக்திவேலா!
பக்குவமாய் வாழவழி தெரியவேண்டும்
பண்புடனே எந்நாளும் விளங்கவேண்டும்
எக்குலமும் இன்பமுடன் வாழச்செய்வாய்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

14. கரைகாணுக் கடல்போலே அலைகின்றேன்யான்
கருணைவைத்துக் காத்திடுவாய் ஐயா!வேலா!
சிவமுருகா என்னையாள வரவும்வேண்டும்
அண்டினோரை ஆதரிக்கும் முருகாநாதா!
இரையில்லாப் புலிபோலே இடுக்கணுற்றேன்
இரக்கமுடன் வந்திடுவாய் அன்புத்தேவா!
திரைமறைவில் இருந்தென்னைக் காணுயோநீ
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

15. காக்கக்கடவியநீ காவா திருந்தக்கால்
ஆக்கமெல்லாம் ஆர்தருவார் ஐயாவேலா!
ஊக்கமுடன் உன்பணியே செய்துவாழ
உண்மையன்பு தந்திடுவாய் உயர்வுள்ளோனே!
ஏக்கமெல்லாம் என்னைவந்து தாக்கிடாமல்
சற்குருவே நீவந்து ஆளுமையா
நீக்கமிலா ஆனந்த வடிவமானுய்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

16. கிருபையுள்ள தெய்வமெனப் பணிந்துநாளும்
கீர்த்தியுடன் உந்தனையான் பாடிவாழ
இருள்வந்து உள்ளத்தில் மறைத்திடாமல்
ஒளியாக வந்தமர்ந்து உண்மைதாராய்!
திருத்தணிகை தனிலமர்ந்த தெய்வமேநீ!
அருள்மழையை என்மேலே பொழியவேண்டும்
கருணைவடி வேல்முருகா! பாருங்கண்ணால்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

17. கீர்த்தியுடன் உன்புகழைச் சொல்லிவாழக்
கிருபைசெய்து காத்திடுவாய் இந்தவேளை
பார்த்தெனையாள் சண்முகனே! பலருங்காணப்
பலகுறையுந் தீர்த்திடுவாய் பழனிவேலா!

தீர்த்தங்களாடி யுன்னைத் துதித்தபேர்க்கு
திவினைகள் அகற்றிடுவாய் சித்திரைவேலா
வேர்ற்றமரம் போலே வாடுகின்றேன்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே

18. குவலயத்தில் குறைகள்பல உண்டுளென்பார்
குறைகாணத் தயங்குகின்றேன் குமரா வேலா!
அவலமெல்லாம் அறுப்பவனே! நினைவில்நின்று
அடியேனுக்கருள் தந்து காப்பாயையா!
கவலையற்ற வாழ்வெனக்குத் தந்துநீதான்
கருணைவைத்து ஆண்டிடுவா யிந்தவேளை
சிவலைநிறமானவே! செந்தூர் வாழும்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

19. கூடியே வாழ்க்கைதன்னி லெந்தநாளும்
குற்றங்கள் பலபுரிந்து வாடுகின்றேன்
ஆடியே அலைந்துலைந்து திரியாவண்ணம்
அன்புருவா யென்னைவந்து ஆளுமையா!
பாடியே பல்நாளும் பரதவித்து
பழவினையால் எந்நாளும் வாடுகிறேன்
நாடியே உந்தனையான் நைந்துவாழ்ந்தேன்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

20. கெடுமதிகள் பலபுரிந்து வாழாவண்ணம்
கேடுகளும் பலவந்து சூழாவண்ணம்
ஆடுமயிலேறி வரும் அரனே என்னை
ஆதரித்துப் பிராணபயந் திருமையா!
தேடியே யானலைந்தேன் தேவதேவா!
தித்திக்கும் செழுமணியே! உன்னை என்றும்
பாடிவரம் பெற்றிடவே நினைக்கின்றேன்யான்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

21. கேவலமாய் நானலைந்தேன் எந்தநாளும்
கீர்த்தியுள்ள தெய்வமென்றே உனைப்பணிந்தேன்
காலனுயிர் குடிக்குமுன்னே கனவிலேனும்
காட்சிதந்து ஆண்டிடுவாய்! தணிகைநாதா!
ஆலமுண்டோன் தன்மகனே அடியார்தம்மை
ஆதரித்து மனக்கவலை தீர்க்கவேணும்
வேலவனே வேங்கை மரமாகிநின்ருய்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

22\. கைதனிலே வேல்பிடித்த கதிரைவாழ்வே!
கனகசபை வீற்றிருக்கும் எங்கள்தேவா!
ஆதரித்து ஆள்பவனும் நீயேயாருய்
அரனுரின் தன்மகனே! ஆண்டியாருய்
வேதனைகள் படுகின்றேன் விமலா நின்னை
வேண்டுமட்டும் நான்பணிந்தேன் வெற்றிவேலா!
சோதனைகள் செய்யாமல் என்னை ஆள்வாய்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

23\. கொக்கிறகு அணிந்தசிவன் மகனே! எங்கள்
குலக்கொழுந்தே குமரகுரு பரனே! என்னை
வக்கணங்கள் வாராமல் வடுவாராமல்
வந்துஎன்னை ஆண்டிடுவாய் வள்ளிலோலா!
எக்குலமும் நீயாக அமர்ந்துநின்ருய்
எங்கள்குறை நீஅறிவாய் இன்பத்தேவா!
சக்கரக்கையோன் மருகா! தகைமைதாராய்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

24\. கோதைவள்ளி நாயகிதன் மணுளா! என்னைக்
குன்றனைய பிழைவந்து சூழ்ந்திட்டாலும்
கீதையுரைத்தோன் மருகா! கிருபைசெய்து
கிட்டிவந்து காத்திடுவாய் கார்த்திகேயா!
பாதைவழி தெரியாத குருடன்போலே
பலதிசையும் அலைகின்றேன் பார்த்தாளையா!
தாதைஎனநீவந்து தடுத்தாட் கொள்வாய்
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

25\. கௌவியேகாலனுர் உயிரை வாங்கக்
கயிற்றுடனே வருகின்ற நேரந்தன்னில்
ஔவியே அவன்தன்னைப் பிடித்துநீரும்
அக்கயிறு என்மேலே வீழாவண்ணம்
செவ்வியவேல் கொண்டுநீ அறுக்கவேணும்
ஔவைக்கு அருள்கொடுத்த அரனேவாவா!
சவ்வாது புனுகுபன்னீர் அணியும்மார்பா!
திருமண்டூர் தனிலுதித்த தில்லைவேலே.

## வாழ்த்து

வையகத்தை வாழவைக்கும் வடிவேல்வாழ்க!
வரம்பலவும் தந்துதவும் மாயோன்வாழ்க!
செய்யபுகழ் திருமுருகன் தாழ்கள்வாழ்க!
சீரானசிவசக்தி பாதம் வாழ்க!
உய்யும்வகை யறிவிக்கும் உருத்திரன்வாழ்க!
உண்மையன்பு பூண்டொழுகும் அடியார்வாழ்க!
ஐயனென ஆதரிக்கும் சிவஞார்வாழ்க!
திருமண்டூர் தனிலமர்ந்த செவ்வேல்வாழ்க!

## நூற்பயன்

அன்புபெருகி அருள்வளர்ந்து இன்பம்பொங்கும்
ஆர்வமெல்லாம் தான்நிறைந்து இருளேநீங்கும்
துன்பமெல்லாம் போயொழிக்கும் துயரம்தீரும்
சூதுகளும் வஞ்சனையும் தொலைந்தேபோகும்
மன்னுயிரைத் தன்னுயிர்போல் காக்கவைக்கும்
அருள்நிறைந்த மண்டூரின் முருகன்மாலை
அன்பன் நாராயணபிள்ளை அறைந்தபாடல்
ஆர்வமுடன் பாடிடுவீர்! அறிவுள்ளோரே!

முருகா சரணம்.

குருவே சரணம்.

முற்றிற்று.



ஆனந்தா அச்சகம், பிரதான வீதி, கல்முனை.

இந்நூல் கிடைக்குமிடம்:

**கோ. நாராயணபிள்ளை வைத்தியர்**

தமிழ் வைத்தியசாலை,

மண்டூர்.